முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை  திரு. பா. கௌதமன், பி.ஏ.,பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 நாள் 21.03.2022

| | | | |
|---|---|---|---|
| எம்.சி.ஒ.பி.எண். | 179/2019 | | |
| பெயர் | சம்சுல் மகரிபா | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். குத்தாலம் காவல் நிலையத்தில் பதிவு செய்யபட்ட முதல் தகவல் அறிக்கை ம சா ஆ 1. எனது மகனின் விபத்து பதிவேடு ம சா ஆ 2. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்று ம சா ஆ 3. மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ம சா ஆ 4. மேற்படி வாகனத்தை ஓட்டிய நபரின் ஓட்டுநர் உரிமம் ம சா ஆ 5. மீனாட்சி மருத்துவ மனையில் வழங்கபட்ட விடுவிப்பு சான்று ம சா ஆ 6. கோயம்புத்துார் வேதநாயகம் மருத்துவ மனையில் வழங்கபட்ட விடுவிப்பு சான்று ம சா ஆ 7 முதல் 9. மருத்துவ ரசீதுகள் ம சா ஆ 10(ஆட்சேபனையுடன்). ஊனச் சான்று ம சா ஆ 11. ஆம்புலன்ஸ் கட்டண ரசீது ம சா ஆ 12(ஆட்சேபனையுடன்). எனது வங்கி கணக்கு புத்தகம் மற்றும் எனது மகனின் ஆதார் அடையாள அட்டை ம சா ஆ 13.

குறுக்கு விசாரணை

எனது வீட்டு வாசலில் இருந்து எனது மகன் சைக்கிளில் இறக்கிய போது வேன் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நானும் எனது நாத்தனாரும் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். எனது நாத்தனாருடன் பேசாமல் எனது மகன் சைக்கிள் ஓட்டியதை கவனித்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் எனது கவனக்குறைவும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. சைக்கிள் ஓட்டும் பயிற்சியை மைதானத்தில் தான் செய்ய வேண்டும் என்றால் ரோட்டில் பயிற்சி செய்ய கூடாது என்றாலும் சரியல்ல. ம சா ஆ 10 ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யபட்டவை

என்றால் சரியல்ல. என் மகனின் ஊனம் நிரந்திரமானதா, தற்காலிகமானதா, குறைய கூடியதா என சொல்லபடவில்லை என்றால் சரிதான். ஆனால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அதிகமானது. மயிலாடுதுறையில் இருந்து தஞ்சாவூர் செல்வதற்கு ஆம்புலன்ஸ் கட்டனம் ரூ.12,500/- என்பது மிக அதிமானது என்றாலும் கட்டணம் ரூ.3000/- இருக்கும் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு அதிகபடியானது என்றால் சரியல்ல.